## மும்பை புறாக்கள்

ராவணன் போல் பத்து நாவுகளால்
பத்து மொழி பேசும் மும்பை நகரம்
வெண்புறாக்களைத் தூது விட்டு
வானத்தில் எழுதுகிறது அமைதியை.
நல்ல வேளையாக
புறாக்களுக்குக் கடவுள் இல்லை.
மகாலட்சுமி கோயிலின் புறாக்கள்
ஹாஜி அலி தர்காவின் புறாக்களின் மூக்குரசி
சுதந்திரமாகக் காதல் மொழி பேசுகின்றன.
வரம் கேட்டோ
அல்லது சொர்க்கத்தில் இடம் கேட்டோ
அளவற்ற தீனியை வாரி இறைக்கிறது
மும்பை நகரம்.
தூரத்து கானகத்துப் புதர்களை நிராகரித்து
மொட்டைமாடிகளில் இரையெடுக்கின்றன
மயில் கழுத்து வண்ணம் பூசிய சாம்பல் புறாக்கள்
சாகும்போது காணாமல் போகும் புறாக்கள்
இறுதியில்
துன்பியல் நாடகம் ஒன்றை அரங்கேற்றுகின்றன.

--- 19 ஆகஸ்ட்டு 2020